59865

# பல நாட்டுச்
# சிறுமிகள்

124

# GIRLS OF MANY LANDS




Y15x
N50
59865

E. …LAKRISHNA KONE
MADHURAI MADRAS

# பலநாட்டுச் சிறுமிகள்

பி. சுந்தரராஜன், B. A., L. T.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை :: :: சென்னை

பதிப்புரிமை] 1950 [விலை அணா 5.

Revised Edition — 1950

59865

Printed at the Excelsior Power Press, Mathurai.—1950.

# முகவுரை

சிறுவர்களும், சிறுமியர்களும் வயது சென்றவர்களின் குணப், செயல் முதலியவற்றைக் கேட்பதினும், தங்களோடு ஒத்த வயதினர்களின் குணம், செயல்களைப் பற்றிக் கேட்பதில் மிகுதியும் விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்களென்பது நடப்பில் யாவரும் அறிந்த விஷயம்.

ஆதலால் நம் நாட்டுச் சிறுவர்களையும், சிறுமியர்களையும் பற்றிப் படிப்பதோடு நில்லாமல், அயல்நாட்டுச் சிறுவர்களைப் பற்றியும், சிறுமியர்களைப் பற்றியும் படித்து அவர்களுடைய நற்குண நற்செய்கைகளைக் கைப்பற்றிப் பள்ளியிற் பயிலும் நம் சிறுமிகள் பயனுற வேண்டுமென்பது எனது நோக்கம்.

அந்நோக்கத்துடனேயே பலநாட்டுச் சிறுவர் என்ற சிறு நூலை வெளியிட்டது போலவே, இப் பல நாட்டுச் சிறுமிகள் என்ற இதனையும் வெளியிடத் துணிந்தேன். பெண்பாடசாலைகளின் ஆசிரியர்கள் இப்புத்தகத்தை தத்தம் கலாசாலைகளில் பாடமாக வைத்து நமது நாட்டுச் சிறுமிகள் பயனுறுமாறு செய்வார்களென்று நம்புகிறேன்.

ஆக்கியோன்.

## பொருளடக்கம்


| எண் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பெற்றோரைப் பேணிய எலிஜபெத் | ... | 1 |
| 2. | பெற்ற தாயைப் போற்றிய சிறுமி | ... | 5 |
| 3. | தந்தையைப் போற்றிய சிறுமி | ... | 7 |
| 4. | தந்தை சொல்லின்படி நடந்த சீதை | ... | 10 |
| 5. | நாட்டுப் பற்றுள்ள ஒரு சிறுமி | ... | 13 |
| 6. | தாய்மொழிப்பற்றுள்ள சிறுமி | ... | 14 |
| 7. | பொறுமையுள்ள ராதா | ... | 17 |
| 8. | தன்னலங்கருதாத ஜோன் | ... | 19 |
| 9. | இரகசியம் காத்த சிறுமி | ... | 22 |
| 10. | உண்மையுள்ள வேலைக்காரச் சிறுமி | ... | 24 |
| 11. | அருள்மனமுள்ள நைட்டிங்கேல் | ... | 26 |
| 12. | பரோபகாரச் சிந்தையுள்ள சிறுமி | ... | 29 |
| 13. | தைரியமுள்ள ஆக்னஸ் | ... | 32 |
| 14. | ஈகைமிக்க பாரியின் மக்கள் | ... | 36 |
| 15. | சகோதர வாஞ்சைமிக்க சிறுமி | ... | 38 |
| 16. | அடக்கமுள்ள சிறுமி | ... | 42 |
| 17. | அறிவுள்ள இரண்டு சிறுமிகள் | ... | 44 |


# பலநாட்டுச் சிறுமிகள்

## 1. பெற்றோரைப் பேணிய எலிஜபெத்

பல ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள ருஷியாவில் ஒரு அரசன் அரசாட்சி புரிந்து வந்தான். அவனிடம் ஒரு பிரபு இருந்தான். அப்பிரபுவின் மேல் அரசன் கோபங்கொண்டான். உடனே அவனை நாட்டை விட்டு வெளியேற்றி ஒரு தீவில் வசிக்கும்படி தண்டனை விதித்தான். அப் பிரபு தன் மனைவியோடும், மூன்று வயதுள்ள பெண்ணோடும் புறப்பட்டுப் போய் வெகு தூரத்திலுள்ள ஒரு தீவில் வசித்து வந்தான்.

அங்கு அவன் பட்ட தொல்லைகள் அநேகம். பனியால் நனைந்தும், வெயிலால் உலர்ந்தும் நாட்களைப் போக்கி வந்தான். அவனுடைய பெண்ணிற்குப் பதின்மூன்று வயது வந்தது; அவள் பெயர் எலிஜபெத். அப்பெண் மிகுந்த சமர்த்தியானதால் தன் தாய் தந்தையருடைய பழைய நிலையையும் அப்பொழுதுள்ள துன்ப நிலையையும்பற்றி நன்கு உணர்ந்து கொண்டாள். தன் பெற்றோர்க்கு இக் கொடிய தண்டனை விதித்த அரசனை நேரில் கண்டு அவனிடம் குறையிரந்து மன்றாடி மன்னிப்

புப் பெற நினைத்தாள். இவ்வெண்ணத்தைத் தன் பெற்றோரிடம் தெரிவித்தாள். அனுமதியளிக்க வேண்டினாள்.

அவ்வுரை கேட்ட பெற்றோர்கள் அவளை நோக்கி, "அருமைக் கண்மணியே ! நீ எங்களிடம் உள்ள பிரியத்தால் இவ்வாறு சொல்லத் துணிந்தாய். ஆனால் நீ சொல்வதைச் செய்ய உன்னால் முடியாது. அரசர் இருக்குமிடமோ அளவு கடந்த தொலைவிலுள்ளது. சிறுமியாகிய நீ அவ்வளவு தூரம் செல்வது அரிது. அப்படியே கஷ்டப்பட்டு நீ அரசர் அரண்மனையை அடைந்தாலும் அவரைப் பார்ப்பது அதனிலும் அரிது. ஒரு வேளை அரசரையே நேரிற் காணிலும் உன்னாலும் அவருடைய கல் நெஞ்சை இளகச் செய்ய இயலாது. ஆதலால் நீ ஒரு துன்பமுமின்றி எங்களுடன் வாழ்ந்து வரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால் எலிஜபெத்தோ ஒரே பிடிவாதமாகத் தான் போகவேண்டும் என்றாள். அவள் வருந்தச் சகியாத அவள் பெற்றோர்களும் வேண்டா மனத்தோடு விடை கொடுத்தனுப்பினர். எலிஜபெத் ருஷியா நோக்கிப் புறப்பட்ட அன்று அவள் பெற்றோர்கள் அடைந்த துக்கத்திற்கு ஓர் அளவே இல்லை.



பெற்றோரின் துன்பத்தைப் போக்க நினைத்துத் தைரியத்துடன் ருஷியா நோக்கிச் சென்ற எலிஜபெத் போகும் வழியில் அடைந்த வருத்தத்திற்கு அளவே இல்லை. ருஷியா செல்லப் பதினெட்டு மாதங்களாயின. வழியில் இவள் வரலாறு கேட்டு இரக்கங்கொண்ட மனிதர்கள் வீட்டில் உண்டும் உறங்கியும் விடாமுயற்சியுடனும், ஊக்கத்துடனும் ஊர் நோக்கிச் சென்றாள்; ருஷியா வந்து சேர்ந்தாள்; அரசர் அரண்மனையையும் அடைந்தாள்; அரசர் பெருமானுக்குத் தன் பெற்றோர்களை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிற ஒரு மனுவையும் கையிற் கொண்டாள்.

எலிஜபெத் அரசரைப் பார்க்க வெகு நாள் காத்திருந்தாள். பல பிரபுக்களை நெருங்கினாள். அவர்கள் இவள்மீது இரக்கங் காட்டவில்லை. பல நாட்களுக்குப் பின் ஒரு கருணையுள்ள சீமாட்டி இவளை அரசியிடம் அழைத்துச் சென்று அவள் முன் விடுத்தாள்.

இவள் சரிதையைக் கேட்ட அரசி இவளுக்குப் பெற்றோரின் பேரிலிருந்த பிரியத்தைக் கண்டு ஆச்சரியங்கொண்டாள். அவள் ருஷியா நோக்கி வரும் வழியில் அடைந்த அல்லல்களைக் கேட்டு மிக வருந்தினாள். அரசரிடம் எலிஜபெத்தின் கதையை அதிக உருக்கத்துடன் அவர் மனம் இரங்குமாறு எடுத்துரைத்தாள்.

பின்பு எலிஜபெத்தையும் அரசர் முன் கொண்டுபோய் நிறுத்தினாள். அவளும் முழந்தாளிட்டு, அரசரிடம் தன் வரலாற்றை அதிக வணக்கத்துடன் உரைத்தாள். பொறுமையுடன் யாவற்றையும் கேட்ட அரசரும், "உத்தம குணம் மிக்க எலிஜபெத்! 'தந்தை தாய்ப்பேண்' என்னும் முதுமொழியைக் கைப்பிடித்துப் பல துன்பங்களையும் சிறிதும் மனத் தளர்ச்சியின்றி அனுபவித்த உன்னை நான் ஓர் உத்தமியென்று கருதுகிறேன். உன் எண்ணப்படியே உன் தந்தையை மன்னித்தேன். உன்னை ஈன்ற அவர் இனி ருஷ்யாவில் முன்போல வாழலாம். உனக்கு வெகுமதியாக நீ வேண்டிய பொருளை நமது காசறையினின்றும் பெறுவாயாக; இனி நீ சுகமாய் வாழ்வாய்" என்று கூறி விடையளித்தார்.

அரசர் கட்டளைப்படி தீவிலிருந்த பிரபுவும், அவர் மனைவியும் ருஷியா வந்து பழையபடி சுகமாய் வாழ்ந்து வந்தார்கள்.

பாலர்களே! நீங்களும் உங்கள் பெற்றோர்களை அன்புடன் போற்றி, எலிஜபெத்தைப் போல் அவர்களைப் பேணல் அவசியமாகும்.

பெற்றோர்ப் பேணல் பிள்ளைகள் கடமை

## 2. பெற்ற தாயைப் போற்றிய சிறுமி

சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் சுவீடன் என்னும் நாட்டைக் குணமிக்க குஸ்டவஸ் என்னும் அரசன் நன்கு பரிபாலித்து வந்தான். ஒரு நாள் அவன் வேட்டையாடக் கானகஞ் சென்றான். நெடுநேரம் வேட்டையாடியபின் மிகுதியும் களைப்புற்றான். தாகத்தால் நாவறட்சி அடையவே, நீர் நாடிச் சமீபத்தில் இருந்த ஒரு கிராமத்தை அடைந்தான்.

அந்த ஊரின் அருகில் ஒரு கிணறு இருந்தது. அதில் ஓர் அழகிய சிறுமி தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். அவளிடம் சென்று அரசன் பருகச் சிறிது தண்ணீர் வேண்டினான். அவனை இன்னாரென அறியாத அச் சிறுமியும் மிகுந்த அன்புடன் அவனுக்குத் தன்னிடமிருந்த வாளியில் தண்ணீர் நிரப்பிக் கொணர்ந்து கொடுத்தாள். அதைப் பருகிக் களைப்பு நீங்கிய அரசனும் அவளைப் பார்த்து, "நற்குணம் வாய்ந்த சிறுமியே! நீ என்னுடன் நாட்டை விட்டு நகரம் வந்தால் உனக்கு வேண்டிய பரிசளிப்பேன். உன்னை ஒரு பிரபுவுக்கு மணஞ் செய்து வைப்பேன். நீ நன்றாய் வாழலாம்; ஏன் வருந்தப்பட்டு வாழ்கின்றாய்" என்றான்.

அதைக் கேட்ட அச்சிறுமி, "ஐயா! தங்கள் கருணைக்கு வந்தனம். ஆனால் நான் தங்களுடன்

நகரம் வர முடியாது. என் வீட்டில் வயது முதிர்ந்த என் தாய் தனியாக வசித்து வருகிறாள். அவளுக்கு என்னைத் தவிர வேறு கதி கிடையாது. அவள் தற்சமயம் நோயால் வருந்துகிறாள். அவள் வருந்தும் போது நான் எப்படி நகரத்தில் சுகமாக வாழ முடியும் ?" என்றாள்.

அச்சிறுமிக்குத் தன் அன்னைபால் இருந்த அன்பைக் கண்ட அரசன் மகிழ்ச்சி கொண்டான். அச்சிறுமியுடன் அவள் வீடு சென்று பாயும் படுக்கையுமாய்க் கிடந்த அவள் கிழத்தாயைக் கண்டான்; இரக்கங்கொண்டான். ஒரு பணமுடிப்பை அத்தாயினிடம் கொடுத்தான். தான் அரசனென்பதை அவளுக்கு அறிவித்தான்: அன்று முதல் அவளுக்கு வேண்டியது தந்து உதவினான். தாய் சிறிது காலமிருந்து பிறகு இறந்தாள்.

தாய் இறந்த பின் அச் சிறுமியும் நகரம் சேர்ந்தாள். ஒரு பிரபுவை மணந்தாள். அதிக சந்தோஷத்துடன் வாழ்ந்து வந்தாள்.

பாலர்களே! அச் சிறுமிக்குத் தன் அன்னையின் பேரில் இருந்த அன்பைப் பார்த்தீர்களா! அரசன் அவளை நகரத்திற்கு வரும்படி அழைத்தும் அவள் தன்னுடைய கிழத்தாயை விட்டுச் செல்ல மறுத்தது எவ்வளவு புகழத்தக்க காரியம் ?

**தாயைக் காப்பது சேயின் கடமை**

---

## 3. தந்தையைப் போற்றிய சிறுமி

பல்லாண்டுகளுக்கு முன் பாரசீகத்தில் ஒரு கொடுங்கோல் மன்னன் இருந்தான். அவனிடம் புகழ்பெற்ற ஒரு சேனைத்தலைவன் இருந்தான். அவன் புகழைக்கண்டு பொறாமை கொண்ட சிலர் அரசனிடம் அவனைப்பற்றிப் பல பொய்க் கதைகளைச் சொன்னார்கள். அச்சேனைத்தலைவன் தன் அரசனுக்குத் துரோகம் செய்ய நினைத்துப் பகை அரசனோடு உடன்படிக்கை செய்து கொண்டிருப்பதாகக் கூறினர். இதுகேட்ட அக்கொடுங்கோல் மன்னன் உண்மையைக் கண்டறியாது அவ் வீரனை ஆற்றின் நடுவில் இருந்த ஒரு பாறையில் கட்டிய கற் கோட்டையில் சிறை வைத்தான்.

அவன் சிறைசென்ற சமயம் அவனுக்கு ஒரே ஒரு பெண் குழந்தை இருந்தது. அக் குழந்தை தலைநகரத்துக்கு வெகு தூரத்தில் இருந்த தன் அத்தையினிடம் வளர்ந்து வந்தது. ஆண்டுகள் பல சென்றன. அக் குழந்தையும் வளர்ந்து அதிக அழகுள்ள சிறுமியானாள். தான் யாரென்பதையும், தன் தகப்பன் அனியாயமாய்ச் சிறைப் பட்டிருப்பதையும் அவள் உணர்ந்தாள். அவனை எப்படியாவது விடுவிக்க நினைத்தாள்; அவளுடைய அத்தை எவ்வளவோ தடுத்தும் ஒரேபிடிவாதமாய்த் தன் தந்தை சிறைப்பட்டிருக்கும் இடந் தேடிக் கால்

நடையாய் நடந்தாள்; ஒரு மாதம் நடந்து மிகவும் கஷ்டப்பட்டுச் சிறைக்கு அருகே உள்ள ஓர் ஊர் வந்து சேர்ந்தாள்.

அங்கே ஒரு நெசவுக்காரனிடம் வேலைக்கமர்ந் தாள். அவன் ஓர் உத்தமன். அவனிடம் தன் எண் ணத்தை வெளியிட்டாள். அதைக் கேட்டவுடன் அந்த உத்தமனும், "தந்தையிடம் அன்பு மிக்க பெண்ணே! உன் அன்புக்கு மெச்சினேன். ஆனால் நீ அச்சிறை அருகே செல்லவும் முடியாது. அச் சிறை அருகே படகு செல்லவே முடியாது. நீ வேகமாக ஓடும் நதியில் படகில்லாமல் போவ தெங்ஙனம்?" என்றான்.

இதைக் கேட்ட அந்தப் பெண் சிறிதும் மனந் தளரவில்லை. அன்று முதல் நீந்தக் கற்றுக் கொண்டாள். விடாமுயற்சியால் நீந்துவதில் சாமர்த் திய மடைந்தாள். ஒரு நாள் இரவில் நீந்திச் சிறைச்சாலையின் அருகில் வந்தாள். ஆனால் அவளுடைய தந்தை அவளைப் பார்க்கவில்லை. மறுபடியும் மறுபடியும் நாள் தவறாமல் இரவில் நீந்திச் சிறைக்குச் சமீபம் சென்றாள். ஒரு இரவில் தன் தந்தையின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டாள். அவளுடைய தந்தையும் பலகணி வழியாக இவளைப் பார்த்துவிட்டான். தனக்கு உதவி செய்ய யாரோ வந்திருப்பதாக எண்ணி மகிழ்ந்தான்.



உடனே அவன் ஆடையைக் கிழித்து ஒரு கயிறு செய்து பலகணி வழியாகத் தண்ணீரில் எறிந்தான். அது கண்ட அச்சிறுமியும் தான் கொண்டு வந்திருந்த முரட்டுக் கயிறு ஒன்றையும், தான் இன்னாரென்று எழுதி வைத்திருந்த காகிதத் தையும் அத் துணிக் கயிற்றில் கட்டிவிட்டாள். அக் கடிதம் கண்டு மகிழ்ந்த தந்தையும் அம்முரட்டுக் கயிற்றை பலகணிக் கம்பியில் இறுகக் கட்டிவிட்டு அதன் மூலம் கவனமாக இறங்கித் தன் அருமை மகளிடம் வந்து சேர்ந்தான்.

பெருமகிழ்ச்சி அடைந்த அந்த இருவரும் அந்நள்ளிருளில் நீந்தி அக்கரை செல்ல ஆரம் பித்தனர். அந்தோ பாவம்! நெடுநாளாகச் சிறைப் பட்டிருந்த அச்சேனைத் தலைவன் மெலிவுற்றிருந்த தனால் நீந்தமுடியாமல் முழுக ஆரம்பித்தான். அப்பொழுது அவன் போட்ட கூச்சல் காவற் காரர்கள் காதில் கேட்டது. உடனே அவர்கள் கூச்சல் வரும் திக்கை நோக்கி அம்பெய்தனர். அந்த உத்தமச் சிறுமியும், அவள் அன்புடன் நேசித்த அவள் தகப்பனும் அம்பினால் அடிபட்டு மாண்டனர்.

குழந்தைகளே! அச்சிறுமிக்கு அவள் தந்தை யின் பேரில் இருந்த அன்பைப் பார்த்தீர்களா! நள்ளிருளில் பயங்கரமான இரைச்சலுடன் அதிக

வேகமாக ஓடும் ஆற்று வெள்ளத்தில் தன் உயிரைப் பெரிதாக நினையாது, நீந்திப்போய் தன் தந்தையை விடுவிக்கக் கருதிய அச்சிறுமியை உலகமெல்லாம் புகழத்தக்க ஓர் உத்தமி என்று சொல்லத் தடையுமுண்டோ!

தன்னுயிர் ஈந்தும் தந்தையைக் காக்க

---

## 4. தந்தை சொல்லின்படி நடந்த சீதை

மதுரையில் ஒரு பெண் பாடசாலை இருந்தது. அப்பாடசாலையில் மேல் மாடியில் சில வகுப்புகள் இருந்தன. அம்மாடிக்கு ஏறிச் செல்லவும், இறங்கி வரவும் ஒரே வழி இருந்தது. அது மிகுந்த ஒடுக்கமானது. ஒரே தடவையில் அந்த வழியில் இரண்டு சிறுமிகள்தான் செல்லலாம்.

அம் மாடியிலிருந்த ஐந்தாம் வகுப்பில் சீதை என்னும் சிறுமி வாசித்துக் கொண்டிருந்தாள். அவள் பொய் பேசமாட்டாள்; பெற்றோர் வார்த்தையைத் தட்டி நடக்கமாட்டாள். உபாத்தியாயினி கற்பிக்கும் பாடங்களைக் கருத்துடன் கேட்டு மிகவும் நன்றாகப் படித்து வந்தாள்.

ஒரு நாள் பட்டப் பகலில் வகுப்புகளில் பாடம் நடந்து கொண்டிருந்தன. சிறுமிகளெல்லோரும் அமைதியாய் வகுப்புகளில் அமர்ந்திருந்தனர்.



அச்சமயம் 'தீ, தீ' என்னும் கூக்குரல் கேட்டது. இந்தச் சத்தம் கேட்டவுடன் சிறுமிகளெல்லாம் பயத்தால் நடுங்கிக் கூச்சலிட்டனர். எங்கே தீப் பிடித்திருக்கிறதென்பது தெரியாமல் எல்லோரும் வகுப்புக்களை விட்டுத் தெருவுக்கு வர நினைத்தனர். மாடியின் மேலிருந்த சிறுமிகள் அங்கிருந்து இறங்க வேண்டிய குறுகிய வழியைக் கூட்டமாய் அணுகினர். 'நான் முன்னே' 'நான் முன்னே' என்று ஒவ்வொரு சிறுமியும் அங்கு வந்து கூடியதால் அந்த வழியில் ஒரு பெரிய குழப்பம் உண்டாயிற்று. கால்தவறிக் கீழே விழுந்தோர்களில் சிலர் மிதியுண்டு இறந்தனர். இன்னும் பலர் படுகாயப் பட்டனர்.

உண்மையில், தீ பள்ளிக்கூடத்தின் ஒரு மூலையில் தான் பற்றியது. அது உடனே அணைக்கப் பட்டது. ஆனால் சிறுமிகளில் அநேகர் தங்கள் அறியாமையாலும், ஆத்திரத்தாலும் அனியாயமாக மிதியுண்டு மாண்டனர்.

இப்படி மாடியில் சிறுமிகள் சண்டையிடும் சமயம் சீதையோ வகுப்பை விட்டு நகரவே இல்லை. மிகுந்த தைரியத்துடன் அவள் இருந்த இடத்திலேயே இருந்துவிட்டாள்.

தீ அணைந்து குழப்பம் ஒருவாறு அடங்கிற்று. பிறகு உபாத்தியாயினி சீதையை நோக்கி,

'அம்மா சீதா! எல்லோரும் உயிர் தப்பிக்க ஓடும் சமயம் நீ மாத்திரம் இருந்த இடம் விட்டு நகராத காரணம் என்ன?' என்று கேட்டாள்.

"ஒரு சமயம் என் வீட்டிற்கு அருகிலுள்ள உயர்தரக் கலாசாலையில் தீப்பற்றியது. அப்போது அங்கிருந்த மாணவர்கள் ஒரே ஓட்டமாய்க் கதவை நோக்கி வெளியில் ஓட நினைத்து வந்தனர். அதனால் பலர் நசுக்குண்டு இறந்தனர். நெருப்பால் இறந்தோரைக் காட்டிலும் நசுக்குண்டு இறந்தோரே அதிகம். இதைப் பார்த்த என் தந்தை நம் பாடசாலையில் தீப்பிடித்தாலும் நான் வகுப்பில் அமைதியாக இருக்க வேண்டுமென்றும், அவசரப்பட்டுக் கூட்டத்திற்குள் சென்று தப்பிஓட முயலக் கூடாதென்றும் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தார். அக்கட்டளையைத் தலைமேற்றாங்கியே இப்பொழுது வகுப்பில் அமைதியாய் இருந்தேன்" என்றாள் சீதை. இது கேட்ட உபாத்தியாயினி, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்றதைக் கடைப்பிடித்து நடந்ததாலன்றோ நீ காயப்படாமல் தப்பினாய். உன் பெற்றோர் அன்புக்கும் உன் தைரியத்துக்கும் மெச்சினேன். மற்றச் சிறுமிகளும் சீதையைப்போல் தந்தை சொல் தட்டாமல் நடக்க வேண்டும்" என்று கூறி வகுப்பிலிருந்த எல்லாச் சிறுமிகளுக்கும் சீதையின் ஆழ்ந்த அறிவைப் பற்றியும், பொறுமையைப் பற்றியும் எடுத்துப் பேசி அவர்களுக்கு வேண்டிய நல்லறிவு புகட்டினாள்.



தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

## 5. நாட்டுப்பற்றுள்ள ஒரு சிறுமி

ஐரோப்பாக் கண்டத்தில் பிரான்சு என்று ஒரு தேசமிருக்கிறது. பல்லாண்டுகளுக்கு முன் அங்கே நெப்போலியன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் அநேக நாடுகளை ஜயித்தான். ஒரு சமயம் ஸைலீஷியா என்னும் தேசத்தையும் எதிர்த்துப் போர் புரிந்து வந்தான்.

அத்தேசத்தாரோ சுதந்திரப் பிரியர். நாட்டன்பு மிக்கோர். உயிரினும் மானமே பெரிதெனமதிப்போர். அதனால் தங்கள் தேசம் நெப்போலியன் கையில் வீழாவண்ணம் அரும்பாடு பட்டனர். ஒவ்வொருவரும் தம்மாலான பொருளுதவி புரிந்து யுத்தத்திற்கு வேண்டிய நிதியை அதிவிரைவில் அதிகப்படுத்தினார்கள்.

அத் தேசத்தில் ஒரு சிறுமி வசித்து வந்தாள். அவளும் தன்னாலியன்ற தேச சேவை செய்ய நினைத்தாள். அவளிடம் ஒரு காசும் இல்லை. ஆனதால் என்ன செய்வதென்று வெகுநேரம் யோசித்தாள். பின்பு தன் நீண்ட அழகிய தலைமுடியை விற்று அதனால் கிடைக்கும் பொருளை யுத்த நிதிக்கு

உதவ எண்ணினாள். நாடகம் நடிப்போர்க்குப் பொய்த் தாடி, பொய்மயிர் முதலியன செய்வதற்காக நீண்ட மயிரை விலைக்கு வாங்குவது வழக்கம். அப்படி விலைகொடுத்து வாங்குபவனை அந்தச் சிறுமி அணுகினாள். பெண்கள் அதிகமாக விரும்பும் தன் நீண்ட சிகையை வெட்டிக் கொடுத்தாள். அதற்குச் சிறிது பொருள் பெற்றாள். அதை யுத்த நிதிக்குக் கொடுத்து மகிழ்ந்தாள்.

இவளது செய்கையை அறிந்த அத்தேசத்தார் அனைவரும் அவளைப் பெரிதும் பாராட்டினர். இச் சிறுமிக்குத் தன் தாய்நாட்டினிடத்தில் இருந்த அன்பு எவ்வளவு போற்றத்தக்கது! ஆதலால் நாமும் நம் தாய்நாட்டைப் பெற்ற தாயெனவே போற்றிவர வேண்டும்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே

---

## 6. தாய்மொழிப் பற்றுள்ள சிறுமி

பல ஆண்டுகளுக்கு முன் லோரைன் என்னும் மாகாணத்தை ஜெர்மானியர் யுத்தத்தில் கைப்பற்றினர். உடனே ஜெர்மானியர் லோரைன் நாட்டினர் தங்கள் தாய்மொழியைக் கற்கக்கூடாதென்று கண்டிப்பான கட்டளையிட்டனர். அம்மொழியைப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கக் கூடா



தென்றும், எங்குப் பார்த்தாலும் ஜெர்மன் மொழி மயமாகவே இருக்கவேண்டுமென்றும் உத்தரவிட்டனர். மனக்கொதிப்புடன் லோரைன் மாகாண வாசிகள் இதற்குட்பட்டு முப்பது வருடங்கள் காலங்கழித்தனர். நாட்டிலிருந்த பள்ளிக்கூடங்களிலெல்லாம் அந்நிய மொழியாகிய ஜர்மன் மொழியே கற்பிக்கப்பட்டு வந்தது.

ஒரு சமயம் ஜெர்மனி தேசத்து சக்கரவர்த்தினி லோரைனில் உள்ள ஒரு இளஞ்சிறுமியர் பாடசாலைக்கு விஜயம் செய்தார். அங்கு மிகுந்த அழகும், உயர்ந்த குணமும், விரிந்த புத்தியும் உள்ள ஒரு சிறுமியைக் கண்டார். அவள் மீது சக்கரவர்த்தினியாருக்குப் பிரியம் உண்டாயிற்று. அவளை உடனே அருகில் அழைத்து, "புத்தியுள்ள பெண்ணே! உன் அறிவுக்கு மெச்சினேன். உனக்கு வேண்டியதைக் கேள். கட்டாயம் தருகிறேன்" என்று கூறினார்.

உடனே அச்சிறுமியும், "தாயே! நான் கேட்பதைத் தட்டாமல் தரமுடியுமோ!" என்றாள். அதைக் கேட்ட சக்கரவர்த்தினியும், "குணமிக்க சிறுமி! நீ யாருடன் சேபகிறாய் என்று உனக்குத் தெரியுமா? ஜெர்மனி தேசத்துச் சக்கரவர்த்தினியாகிய எனக்கு முடியாத காரியமும் உண்டோ? நீ எது கேட்டாலும் அதை உனக்கு அளிப்பேன்" என்றார். அங்கிருந்தோரனைவரும் அரசியிடம் சிறுமி என்ன பரிசு

கேட்கப் போகிறுளோ என்று அறிய ஆவல் கொண்டனர். அச்சமயம் அவர்களும், சக்கரவர்த்தினியும் பிரமிக்கும்படி, சிறுமி முழந்தாளிட்டு, "தாயே! நான் இங்கு படிக்கும் பாடங்களை என் தாய் மொழியில் படிக்க அனுமதி தாருங்கள். இதுவே தங்களிடம் நான் வேண்டும் பரிசு" என்ருள்.

அதைக் கேட்ட சக்கரவர்த்தினி பதில் சொல்ல முடியாமல் திகைத்தார். தம் கணவரான சக்கரவர்த்தியின் உத்தரவை மாற்ற அவருக்கு அதிகாரம் கிடையாதல்லவா? அவரும் சக்கரவர்த்தியை அணுகினர். தம் வாக்குப் பொய்யாகாமல் பாதுகாக்கும்படி அரசரை வேண்டினர். அவரும் சம்மதித்தார். லோரைன் மாகாணத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் அன்று முதல் தாய் மொழியில் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அச்சிறுமியின் தாய் மொழிப் பற்ருல் அந்நாட்டிற்கே நன்மை உண்டாயிற்று. சிறுமிகளே! அச்சிறு பெண்ணிற்குத் தன் தாய்மொழியின்மேல் இருந்த அன்பைப் பார்த்தீர்களா? அதனுலன்ருே அவளுடைய பெயரை இன்னும் நாம் கொண்டாடுகிருேம்!

ஆகவே நாமும் நம் தாய்மொழியாகிய தமிழில் அன்பு பூண்டொழுகுதல் அவசியம்.

சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா

## 7. பொறுமையுள்ள ராதா

பல வருடங்களுக்கு முன் நம் நாட்டில் ஒரு சமயம் மழையே பெய்யவில்லை. அதனுல் நாட்டில் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. மனிதர்கள் உணவுப் பொருள் கிடைக்காமல் அதிக அல்லல்பட்டனர். குடிக்கத் தண்ணீரில்லாமல் தாகத்தால் தவித்தோர் பலர். உண்ண உணவில்லாமல் பசியால் இறந்தோர் அநேகர். அச்சமயம் ஒரு கிராமத்தில் ஒரு பணக்காரர் இருந்தார். அவர் அதிகக் கருணை வாய்ந்தவர். அவரிடம் அக்கிராமத்திலுள்ள சிறுமிகள் ஒன்று கூடிக் கூட்டமாய்ச் சென்ருர்கள்.

அவரும் அவர்களைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். சிறுமிகளுக்கு ரொட்டி தட்டிக் கொடுக்கும்படி தம் வேலையாட்களுக்குக் கட்டளையிட்டார். அவர்களும் அப்படியே ரொட்டி தட்டி ஒரு பெரிய கூடையில் போட்டுப் பிரபுவின் முன் கொண்டு வந்து வைத்தனர்.

அவர் அப் பெண்களைக் கூப்பிட்டு, "சிறுமிகளே! ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரொட்டியை எடுத்துக் கொள்ளுங்கள். தினமும் நீங்கள் காலையில் வந்தால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரொட்டி பெற்றுப் போகலாம்" என்ருர்.

அவர் அப்படிச் சொல்லி வாய் மூடியவுடன் சிறுமிகள் அனைவரும் அக்கூடையை அணுகினர்.

"எனக்கு முந்தி, எனக்கு முந்தி, எனக்குப் பெரிது" என்று சிறிதும் பொறுமையில்லாமல் ஒருவரோடொருவர் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு ரொட்டிகளை எடுத்துச் சென்றனர்.

அவர்கள் அப்படிச் சண்டையிட்டுக் கொண்டிருக்கையில் ராதா என்ற சிறுமிமட்டும் அதிகப் பொறுமையுடன் ஓர் இடத்தில் நின்று கொண்டிருந்தாள். எல்லோரும் பெரிய ரொட்டிகளை எடுத்துச் சென்றபின் ராதையும் கூடையினருகில் வந்தாள். அங்கிருந்த சிறு ரொட்டியை எடுத்துக்கொண்டு வீடு சென்றாள். மறுநாளும் இப்படியே நடந்தது. மறு தினமும் பொறுமையுள்ள ராதாவும் சிறு ரொட்டியுடன் வீடு சென்றாள். வீடு சென்று அதைத் துண்டித்தாள். உடனே அதிலிருந்து அநேக தங்கக் காசுகள் கீழே விழுந்தன. அதைக்கண்ட ராதாவின் தாய் பயந்து, "அன்புள்ள ராதா! இப் பணம் நம்முடையதல்ல, பிறர் பொருளை எடுத்துக் கொள்ளல் பாவம். ஏதோ தவறுதலாய் இக்காசுகள் இந்த ரொட்டிக்குள் இருக்கின்றன. இக்காசுகளை உடனே பிரபுவிடம் சேர்த்துவிடு" என்றாள். ராதாவும் பொற்காசுகளுடன் அச் சீமானிடம் திரும்பச் சென்றாள். அவைகளை அவரிடம் கொடுத்தாள்.

அதுகண்ட அப்பிரபு, "பொறுமைமிக்க குழந்தாய்! நான் வேண்டுமென்றே அக்காசுகளை



அந்த ரொட்டியில் வைக்கும்படி எனது வேலையாளுக்குக் கட்டளையிட்டிருந்தேன். நீ பொறுமையுடன் நின்று கடைசியில் கிடைக்கும் சிறிய ரொட்டித் துண்டைப் பெற்றுச் சென்றாய். உன் குணத்திற்கு மெச்சியே இவ்வாறு பொற்காசுகளை ரொட்டியில் வைக்கும்படி கட்டளையிட்டேன். இப்பொழுதோ உன்னிடம் பொறுமையோடு பிறர் பொருளுக்கு ஆசைப்படாத குணமும் அமைந்திருப்பது கண்டு அகமகிழ்ந்தேன். அக்காசுகளை நீயே வைத்துக்கொள்" என்றார். அச் சிறுமியும் பொன்னுடன் வீடடைந்தாள்.

**பொறுமையே புகழும் பெருமையு மாகும்**

## 8. தன்னலங் கருதாத ஜோன்

ஐரோப்பாக் கண்டத்தில் பிரான்சு என்று ஒரு தேசமிருக்கிறது. அத்தேசத்தோடு இங்கிலாந்து பல வருடங்கள் போர் புரிந்தது. அநேகமாய் அந்த நாடு முழுவதையும் கைப்பற்றியது. பிரான்சு தேசத்தவர்கள் தங்கள் தேசத்தைக் காப்பாற்றிக் கொள்ளச் சக்தியற்றிருந்தனர். அத்தேச அரசனோ பல போர்களில் தோல்வியுற்று மனத் தளர்ச்சி அடைந்து இருந்தான்.

அப்பொழுது அந்நாட்டில் ஒரு குக்கிராமத்தில் ஜோன் என்னும் பெண்மணி வசித்து வந்

தாள். அவள் மிகுந்த கடவுட்பற்று உள்ளவள், தாய் நாட்டுப் பற்று மிகுந்தவள். தன் தாய் நாடாகிய பிரான்சு தேசத்தை அன்னியரின் ஆட்சியினின்று விடுவிக்க வேண்டுமென்று கடவுளை வேண்டினுள், உடனே, “ நீயே வீரனைப்போல் உடைதரித்துச் சிப்பாய்களை நடத்துவாயாக. வெற்றி பெறுவாய் ” என்று ஒரு அசரீரி ஒலி உண்டாயிற்று. இந்த வார்த்தையைக் கடவுளின் கட்டளையாகக் கொண்டு ஜோன் பிரான்சு அரசனிடம் வந்தாள். தானே சேனையை ஆங்கிலேயருக்கு விரோதமாக நடத்துவதாகச் சொன்னுள். அரசன் முதலில் இவளை ஒரு பித்துடையாளெனக் கருதினுன். அவள் உருவத்தைக் கண்டு ‘இச்சிறுமியா ஆங்கிலேயரை விரட்டக் கூடியவள்’ என்று எண்ணி நகைத்தான்.

ஆனுல் ஜோன் திரும்பவும் மன்ருடிக் கேட்டுக் கொண்டாள். அரசனும் அவளைத் தன் சேனைக்குத் தலைவியாக்கினுன். அச்சிறுமியும் வீராவேசத்துடன் சேனையை நடத்தினுள். தெய்வ பக்தி நிறைந்த ஜோன் தான் சென்றவிடத்திலெல்லாம் வெற்றி பெற்ருள். ஆங்கிலேயர்கள் அவள் சேனையின் முன் நிற்க முடியாமல் ஓடினர். பிரான்சு தேசத்தரசனும் மறுபடியும் தன் நாட்டை அடைந்தான்.



அரசன் தனக்கு இப்பெரிய உபகாரம் செய்த ஜோனை வரவழைத்தான். “கடவுளருளால் என்னையும், நம் நாட்டையும் காப்பாற்றும் பொருட்டு அனுப்பப்பட்ட உத்தமியே! நீ செய்த பேருபகாரத்திற்குத் தகுந்த கைம்மாறு என்னுல் என்ன செய்ய முடியும்! ஆயினும் ஏதாவது ஒரு வெகுமதி உனக்கு அளிக்க விரும்புகிறேன். விரும்பியதைக் கேட்பாயாக ” என்ருன்.

அவன் அப்படிச் சொன்னவுடன் ஜோன் அவனடி வணங்கி, “ஐயனே! என்னுலானது ஒன்றுமில்லை. எல்லாம் கடவுள் செயல். எனக்குத் தாங்கள் வெகுமதியளிக்க விரும்புகின்றீர்களல்லவா? என் கிராமவாசிகள் மிகவும் ஏழைகள். அவர்கள் அரசருக்குச் சேரவேண்டிய வரிப்பணம் கொடுக்கக் கஷ்டப்படுகிருர்கள். இன்று முதல் அக் கிராமவாசிகள் யாதொரு வரியும் கொடுக்கவேண்டியதில்லை என்று உத்தரவளியுங்கள். அதுவே நான் வேண்டும் வரம்” என்ருள். தன்னலங் கருதாமல் தன் கிராமவாசிகளின் நலங்கருதிய ஜோனை ஒரு தெய்வப் பிறவியாகவே கருதி[illegible]ன்; அவ்வாறே உத்தரவிட்டான். கு[illegible] நா[illegible] ஜோனைப் போலத் தன்ன[illegible]ருதாதவர்க[illegible] இருத்தல் அவசியம்.

தன்னலங் [illegible]த் தன்மையே [illegible]தது

# 9. இரகசியம் காத்த சிறுமி

இங்கிலாந்தில் கிராம்வெல் என்று பெயர் வாய்ந்த ஒரு போர்வீரன் இருந்தான். அவன் அரசனையே போரில் வென்றான். இங்கிலாந்து தேசத்தைப் பத்து ஆண்டுகள் முடி சூடா மன்னனாய் ஆண்டுவந்தான்.

அவனுக்கு ஆறுவயதுள்ள ஒரு பேத்தி இருந்தாள். அச்சிறுமிமேல் அவனுக்கு அதிக அன்பு உண்டு. அந்தரங்கக் காரியதரிசிகளுடன் பேசும்போதும், உலாவப் போகும்போதும், உண்டி கொள்ளும்போதும் அக்குழந்தை கிராம்வெல் கூடவே இருக்கும்.

ஒரு சமயம் அவனுடைய மந்திரிகள் அவனிடம் மிகவும் இரகசியமான ஒரு செய்தியைப் பேச விரும்பினார்கள். ஆனால் அச்சிறுமி அவர்களுடன் இருக்கும்போது அவர்கள் அது பற்றிப் பேசப் பின் வாங்கினர். அதைக் குறிப்பால் அறிந்த கிராம்வெல், "நண்பர்களே! இக் குழந்தை இருக்கும்போது இரகசியம் பேசினால் அது வெளிப்பட்டுவிடும் என்று நினைக்கிறீர்கள். அந்தக் கவலை உங்களுக்குக் கொஞ்சமும் வேண்டாம். அச்சிறுமியும் உங்களைப் போலவே நம்பத் தகுந்தவள்" என்று சிரித்தான்.



ஆனாலும் மந்திரிகள் கிராம்வெல் சொன்னதை முற்றிலும் நம்பவில்லை. அதனால் தான் சொன்னதை மெய்ப்பிக்க நினைத்த கிராம்வெல் தன் பேத்தியின் காதில் சில செய்திகளைச் சொல்லி, "என் அருமைக் குழந்தாய்! இது பரம ரகசியமாய் இருக்கவேண்டிய செய்தி. ஒருவரிடமும் இதைச் சொல்லிவிடாதே" என்றார்.

பிறகு அச்சிறுமியின் தாயையும், பாட்டியையும் கூப்பிட்டுத் தான் சொன்ன விஷயத்தை எவ்விதமாவது அச்சிறுமியிடமிருந்து அறிந்துவிடும்படி கட்டளையிட்டார். அவர்களும் அச்சிறுமியை அணுகி, "குழந்தாய்! உன்னிடம் தாத்தா இன்று சொன்ன இரகசியம் என்ன? அதைச் சொல்" என்றார்கள். அதைக்கேட்ட அச்சிறுமி, "என் அருமைத் தாயே! என் அருமைப் பாட்டியே! அதை நான் உங்களுக்குச் சொல்ல முடியாது. என் தாத்தா அதை இரகசியமென்றும், வேறு ஒருவரிடமும் வெளியிடலாகாதென்றும் கட்டளையிட்டிருக்கிறார். நானும் ஒப்புக்கொண்டிருக்கிறேன். அதனால் நீங்கள் அதைச் சொல்லும்படி என்னைத் தொந்தரவு செய்யக்கூடாது" என்று கூறினாள்.

பின்னும் அவர்கள் அவளுக்குப் தின்பண்டம் கொடுப்பதாகச் சொல்லிப் பார்த்தார்கள். அவள் ஒரே பிடிவாதமாகச் சொல்ல மறுத்தாள். எனவே,

சவுக்கால் அடிப்பதாகச் சொல்லிப் பயமுறுத்தினர்கள். அதற்கும் அவள் அஞ்சவில்லை. அவர்கள் தாங்கள் எவ்வளவோ முயன்றும் தங்கள் முயற்சி அவளிடம் பலிக்கவில்லை என்று கிராம்வெல்லினிடம் தெரிவித்தனர். அதுகேட்ட அவன் மந்திரிகள் அடைந்த வியப்பிற்கு அளவே இல்லை.

மறைமொழி கூறார் மாண்புடையோரே

---

## 10. உண்மையுள்ள வேலைக்காரச் சிறுமி

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் இங்கிலாந்தில் ஒரு செல்வர் இருந்தார். அவர் ஒரு பெரிய மாடி வீட்டில் வசித்து வந்தார். ஆலிஸ் அயர்ஸ் என்னும் வேலைக்காரச் சிறுமி அச்செல்வர் வீட்டில் வேலை பார்த்து வந்தாள். அவள் மிகுந்த புத்தியுள்ளவள். தலைவரிடம் அன்பும் நன்றியுமுள்ளவள். தன் தலைவரின் மூன்று சிறு குழந்தைகளையும் வைத்துப் பாதுகாப்பதே அவளது முக்கிய வேலையாய் இருந்தது.

ஒருநாள் நடு இரவில் அவ்வீடு தீப்பற்றிக் கொண்டது. அந்த வீட்டில் எல்லோரும் நன்கு உறங்கிக் கொண்டிருந்தனர். மேல் மாடியில் வேலைக்கார ஆலிஸ் குழந்தைகளுடன் உறங்கிக் கொண்டிருந்தாள். மாடியிலும் நெருப்புச் சூழவே அவள் விழித்தெழுந்தாள். வீடு பூராவும் தீப்பற்றி எரிவ



தைக் கண்டாள். மாடியிலிருந்து கீழே இறங்கும் வழியெல்லாம் தீயால் வெந்து கொண்டிருந்தது. மாடியிலிருந்து தப்புவதற்கு அங்கிருந்த பலகணி வழியாகக் கீழே குதிக்க வேண்டும்; வேறு வழியில்லை. கீழே குதித்தால் மண்டையுடைந்து எலும்பு நொறுங்கி இறக்க நேரிடும்.

தீப்பற்றி எரிவதைக்கண்ட மக்கள் கும்பல் கும்பலாய் அவ்வீட்டிற்கருகில் கூடினர். மாடியில் இருந்து பலகணி வழியாக எட்டிப் பார்த்த வேலைக்காரச் சிறுமியைக் கீழே குதித்து விடும்படி மக்கள் கூச்சலிட்டனர். அவள் வந்து விழுந்தால் அடிபடாமல் இருக்கும் பொருட்டுத் தங்கள் சட்டைகளையும் துணிகளையும் கீழே குவியலாய்க் குவித்தனர். ஆனால் ஆலிஸ் கீழே குதிக்கவில்லை. மாடியில் மறைந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் துணியில் சுற்றிய ஒரு சிறு குழந்தையைக்கொண்டு வந்து ஜன்னலின் வழியாய்க் கீழே எறிந்தாள். அக்குழந்தை பிழைத்தது. மறுபடியும் மக்கள் ஆலிஸைக் கீழே குதித்து உயிர்தப்ப வேண்டினர். ஆனால் அவள் மறுபடியும் மாடியிற் சென்று இரண்டாம் குழந்தையையும் கொண்டுவந்து கீழே எறிந்தாள். அதுவும் பிழைத்தது. இதேபோல் மூன்றாந் தடவை சென்று மூன்றாம் குழந்தையையும் கீழே எறிந்து காப்பாற்றினாள்.

59865

இதற்குள் வீடு முழுவதும் புகை சூழ்ந்த தாலும், ஆலிஸ் இருந்த இடத்தில் நன்ருகப் பற்றி எரிந்ததாலும் அச் சேவகச்சிறுமி அதிக களைப்பு அடைந்தாள். பலகணியின் அருகே வந்து அதினின்றும் கீழே குதிக்கவும் வலியற்றவளாய் இருந்தாள். ஆயினும் மிகுந்த வருத்தத்துடன் அவள் கீழே குதித்தாள். ஆனல் குறிதப்பி, விழும் போது வீட்டின் சுவரில் அடிபட்டாள். அதனுல் மண்டையில் பலத்த காயம் பட்டது. அக்காயத்தால் மூன்று நாளில் இறந்தாள். ஆயினும் அவள் தன் தலைவர் மேல் வைத்த அன்பைக் கண்ட மக்கள் அவளைப் பெரிதும் புகழ்ந்தனர். அவளது ஊனுடம்பு போன போதிலும் இன்னும் அவளது புகழுடம்பு நிலைத்து நிற்கின்றது. தன் உயிரைக் காப்பாற்ற நினையாது தன் தலைவனுடைய குழந்தைகளைக் காப்பாற்ற ஆலிஸ் முற்பட்டது எவ்வளவு புகழத்தக்க காரியம்? சிறுமிகளே! நீங்களும் உண்மையைக் கொள்ளுங்கள். பிறர்க்கு உதவி புரியுங்கள்; அதுதான் கடவுளுக்குப் பிரீதி.

உண்மையுழைப்பே உலகினும் பெரிது

---

## 11. அருள்மனமுள்ள நைட்டிங்கேல்

இங்கிலாந்தில் நைட்டிங்கேல் என்று பெயர் வாய்ந்த ஒரு சிறுமி இருந்தாள். அவள் தந்தை



பெரிய செல்வர். அதனுல் அச்சிறுமி வெகு செல்வமாக வளர்ந்து வந்தாள். அவளுக்கு வேண்டிய பட்டாடைகளும், நகைகளும் இருந்தன. இவ்வளவு செல்வத்தில் வளர்ந்த அச்சிறுமி, செருக்கில்லாமல் எல்லோரிடமும் அன்புடன் பழகி வந்தாள். அவள் பிறர் துக்கம் காணச் சகியாள். வாயில்லாப் பிராணிகள் படும்வருத்தத்தையும் நீக்கத் தன்னுலான முயற்சி செய்து வந்தாள்.

ஒரு சமயம் அவளுடைய அண்டை வீட்டிலுள்ள நாயைச் சில கொடிய பையன்கள் கல்லால் எறிந்து விட்டார்கள். அதனுல் அந்நாயின் காலில் காயம்பட்டது. அக்காயம் நாளுக்குநாள் அதிகமாக, நாய் மிக வருந்தினது. அதன் துன்பத்தைக் காணச் சகியாத அந்த நாய்க்குரியவன் அதைக் கொன்றுவிடத் தீர்மானித்தான். இச்செய்தி நைட்டிங்கேலுக்குத் தெரிந்தது.

நைட்டிங்கேல் அந்த வீட்டிற்குச் சென்ருள். அந்த நாயின் தலைவனைச் சந்தித்தாள். தான் அந்த நாயைக் காப்பாற்றுவதாக வாக்களித்தாள். பிறகு அந்த நாயின் காலை நன்ருய்க் கழுவி, மருந்து வைத்துக் கட்டினுள். அதற்கு வேண்டிய உணவைக் கொண்டுவந்து கொடுத்தாள். அந்த நாய் முற்றிலும் குணமடையுமட்டும் அதற்கு வேண்டிய சிகிச்சையை மனமுவந்து செய்தாள். அவளுடைய

திறமையால் அந்த நாய் மறுபடியும் பிழைத்து, ஓடும் சக்தியையும் பெற்றது. வாயில்லாப் பிராணியாகிய நாய்க்கு இந்தப் பெரிய உதவியைச் சிறு வயதில் செய்த நைட்டிங்கேல் தான் பிற்காலத்தில் போர்க்களத்தில் அடிபட்டுக் கிடக்கும் மனிதர்களுக்கு வேண்டியபடி தன்னுலான அரும்பணி செய்து, உலகம் போற்றும் உத்தமியானுள்.

பாலர்களே! நைட்டிங்கேல் சிறு வயது முதல் பிராணிகளின்மேல் காட்டிய அன்பைப் பார்த்தீர்களா! அந்த அன்பு பிற்காலத்தில் முதிர்ந்து மனிதர்களுக்கும் அந்த உத்தமி வேண்டிய உதவிகளைச் செய்ய முன்வந்தாள். இப்பொழுது அவளை உலகமே புகழ்கின்றது.

சில சிறுவர், சிறுமிகள் நாயின் மேல் கல்லை எறிந்து துன்புறுத்துகிருர்கள். அது கோபங் கொண்டு அவர்களைக் கடிக்கவும் செய்கிறது. மற்றும் சிலர் பட்டுப்பூச்சி முதலிய வாயில்லாப் பிராணிகளை வதைக்கிருர்கள். வாயில்லாப் பிராணிகளை வதைப்பது பிசகு. நைட்டிங்கேலின் நன்மாதிரியை முன் மாதிரியாகக் கொள்ளல் நலம்.

**கருணையுள்ளமே கடவுள் தன்மை**

## 12. பரோபகாரச் சிந்தையுள்ள சிறுமி

பாலர்களே! நீங்கள் சமுத்திரத்தைப் பார்த்திருக்கிறீர்களா? சமுத்திரம் அதிக ஆழமுள்ள ஒரு நீர்நிலை. அதில் எப்பொழுதும் பெரும் அலைகள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. சமுத்திரம் பார்ப்பதற்குப் பயங்கரமாய்த் தோன்றும்.

சில சமயங்களில் புயல் காற்றடிக்கும். அப்படிப் புயல் அடிக்கும்போது சமுத்திரத்தில் அலைகள் மலைபோல் எழும். அச்சமயம் கப்பல்களாவது, படகுகளாவது புயலில் அகப்பட்டுக் கொண்டால் அவைகள் மிகுந்த துன்பத்திற்குள்ளாகின்றன. சில வேளைகளில் கப்பல்கள் சமுத்திரத்திலுள்ள பாறைகளில் மோதுண்டு உடையும்.

இங்கிலாந்தில் சமுத்திரக்கரை ஓரத்தில் ஒரு வீட்டில் ஒருவர் வசித்து வந்தார். அவருடன் அவர் மனைவியும், அவருடைய அருமைப் பெண்ணும் வசித்து வந்தார்கள். அவர்கள் இருந்த இடத்திற்கு அருகில் கப்பல்கள் வந்திறங்கும் துறைமுகம் இருந்தது. அதன் சமீபத்தில் சமுத்திரத்தில் சில பாறைகளும் இருந்தன. அவைகளில் கப்பல்கள் மோதி உடையா வண்ணம் காப்பாற்ற அப்பாறைகளில் சில மணிகள் கட்டப்பட்டிருந்தன. கப்பலோட்டிகள் எப்படிப்பட்ட இரவி

லும் மணியோசையைக் கேட்டுப் பாறை இருப்பதை அறிந்து, கப்பலை அப்பால் விலக்கிச் செல்வார்கள்.

ஒரு இரவில் பெரும் புயல் அடித்தது. வானம் கருத்து, இடி மின்னலுடன் மழை கொட்ட ஆரம்பித்தது. அந்த இரவில் வந்த கப்பலொன்று கப்பலோட்டிகள் எவ்வளவோ முயன்றும் முடியாமல் பாறைமீது மோதிற்று. அதனால் கப்பல் உடைய, அதிலிருந்த பிரயாணிகளில் அநேகர் தண்ணீரில் மூழ்கி இறந்தனர். சிலர் உடைந்த கப்பலின் மேல் பாகத்தைப் பிடித்துக் கொண்டனர். அந்த உடைந்த கப்பல் எந்த நிமிஷத்தில் மூழ்குமோ, அப்பொழுது அவர்களும் இறக்க வேண்டியதே.

அப்பரிதாபமான நிலையிலிருந்த அவர்கள் பெருங் கூச்சலிட்டனர். அக்கூக்குரல் சமுத்திரக் கரை ஓரத்தில் வசித்த பெண்ணின் காதுக் கெட்டியது. உடனே அப்பெண் தன் தந்தையைத் தட்டி எழுப்பினாள். அவரும் கடலில் இருந்து வரும் கூச்சலைக் கேட்டார். அப்பெண்மணி "தந்தையே! அநேகர் அபாயமான நிலையில் இருப்பதாகத் தோன்றுகிறது. தாங்கள் நமது படகுடன் அங்கு சென்று அவர்களைக் காப்பாற்றவேண்டும். காலதாமதம் செய்யக்கூடாது" என்றாள். அவளது தந்தையும், "கண்மணி! அநேகர் அபாய நிலைமை



ில் இருக்கிறார்களென்பது உண்மையே. ஆனால் ந்த நள்ளிருளில், இப்பெரும் புயல் அடிக்கும் வேளையில், ஒருவர் உதவியுமின்றி நான் தனியாய் ன்ன செய்யக்கூடும்?" என்று கேட்டார்.

இப்படி அவர் சொல்லி வாய்மூடுமுன் அப் ரோபகாரச் சிந்தையுள்ள சிறுமி, "தந்தையே! அதைக் குறித்துத் தாங்கள் வருந்த வேண்டாம். ான் உங்களுடன் வரத் தயாராய் இருக்கிறேன். ான் நன்கு படகைச் செலுத்துவேன் என்பது ங்களுக்குத் தெரியுமே" என்றாள். இது கேட்ட தந்தை, "என் அருமைக் குழந்தையே! இப்பெரும் யல் அடிக்கும் சமயம் உன்னைக்கடலில் படகு செலுத்தச்செய்வது கூடாத காரியம். அது உனக்கே ஆபத்தாய் முடியும்!" என்றார். அவர் எவ்வளவு சொல்லியும் சிறுமி ஒரே பிடிவாதமாய்த் துணிந்ததால் தந்தையும் ஊக்கமடைந்து கடலிற் செல்ல டன்பட்டார்.

பிறகு அவர்கள் படகிலேறிப் பாறையை நோக்கிச் சென்றனர். கொந்தளிப்போடு கூடிய டலிற் செல்வது அவர்களுக்கு மிகுந்த ஷ்டத்தைக் கொடுத்தது. இருந்தபோதிலும் டவுளின்மேல் பாரத்தைப்போட்டுப் பிறர் வருந்தச் கியாத அந்த உத்தமர்கள் ஊக்கத்துடன் சென்று உடைந்த கப்பலின் பக்கம் அணுகினர். அங்கு

அச்சமயம் தண்ணீரில் மூழ்காதிருந்தவர்களைப் படகிலேற்றிக் கொண்டு திரும்பினர். உயிர் தப்பிய பிரயாணிகள் உயிர் காத்த உத்தமர்களை வாயாரப் புகழ்ந்தனர்; போற்றினர்; அச்சிறுமிக்கு வேண்டிய பரிசளித்தனர்.

பாலர்களே! இச்சிறுமியின் நற்குணத்தைப் பார்த்தீர்களா? தனக்கு ஆபத்து நேரிடினும் பாதகமில்லை; மற்றவர்களை ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என நினைத்த அந்தச் சிறுமியை உத்தமி என்று சொல்லத் தடையுண்டோ!

உதவி செய்வதே உயர்ந்த செல்வம்

---

## 13. தைரியமுள்ள ஆக்னஸ்

சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு இங்கிலாந்திலுள்ள ஒரு மலைச்சாரலில் சிறிய வீடொன்றில் ஒருவர் வசித்து வந்தார். அவர் குடும்பம் மிகப் பெரியது. அவருக்கு ஆறு குழந்தைகள் இருந்தன. அவைகளில் மூத்த பெண்ணின் பெயர் ஆக்னஸ்; அவளுக்கு வயது ஒன்பது.

இச்சிறுவீட்டின் சமீபத்தில் வேறு வீடுகள் இல்லை. ஒரு மைலுக் கப்பால் தான் சில வீடுகள் இருந்தன. ஒரு நாள் ஆக்னஸின் தாயும், தகப்பனும் சமீபத்தில் உள்ள ஊர் செல்ல வேண்டியிருந்தது.



காலையில் சென்று, மாலையில் திரும்ப நினைத்தனர். தாய் ஆக்னஸைக் கூப்பிட்டு "அருமையுள்ள ஆக்னஸ்! உன் தந்தையும் நானும் சமீபத்தில் உள்ள கிராமம் சென்று, மாலை திரும்பிவர உத்தேசித்திருக்கிறோம். உன் தம்பிகளையும் தங்கைகளையும் நீ பத்திரமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உணவைக் கொடுத்து, அவர்களுடன் விளையாடிக்கொண்டிரு. நாங்கள் சீக்கிரம் திரும்பிவிடுகின்றோம்" என்றாள். அக்குழந்தையும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டாள். பின்பு தாயும் தந்தையும் வீட்டைவிட்டுப் போனார்கள்.

நடுப்பகலானதும் ஆக்னஸ் எல்லோருக்கும் அன்னமிட்டாள். சிறு குழந்தைகளுடன் நன்றாக விளையாடிக் கொண்டிருந்தாள். நேரமாயிற்று; மாலையும் வந்தது. தாயாரும் தகப்பனாரும் வரவில்லை. அச்சமயம் காற்று அதிகமாக அடிக்க ஆரம்பித்தது; பனி கொட்ட ஆரம்பித்தது. எங்குப் பார்த்தாலும் ஒரே இருட்டாய் இருந்தது.

தைரியமுள்ள ஆக்னஸ் இரு கைக்குழந்தைகளுக்கும் பசுவின் பாலைக் கொடுத்தாள். தொட்டிலில் விட்டுத் தாலாட்டினாள். அவைகள் தூங்கின. பின்னர், மற்ற மூன்று குழந்தைகளுடனும் தாய் தந்தையர்களின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு

விழித்திருந்தாள். மணியோ பன்னிரண்டு அடித்தது. ஒருவரும் வரவில்லை. அதிகக் களைப்படைந்த நான்கு குழந்தைகளும் தங்களைக் காக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தனை செய்து கொண்டு தூங்கிவிட்டன.

பொழுது புலர்ந்தது. ஆக்னஸ் படுக்கை விட்டெழுந்தாள். தன் பெற்றோர் கட்டாயம் வந்துவிடுவார்களென்று நினைத்தாள். ஆனாலும் பனி மழை இடைவிடாது பெய்ததனால் வெளியில் தலை காட்ட முடியாமல் இருந்தது. காலையில் குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுக்கத் தகுந்த ஏற்பாடு செய்தாள். நடுப்பகல் நேரமாயிற்று. இன்னும் பெற்றோர் வரவில்லை. பகல் போஜனத்திற்கு வேண்டிய அளவு சாப்பாடு இல்லை. இருந்ததைக் குழந்தைகளுக்குக் கொடுத்தாள். தான் மட்டும் மிகக் கொஞ்சமாகவே சாப்பிட்டாள். இரவும் வந்தது. அன்றிரவிலும் அவர்கள் தனிமையாக இருந்தார்கள். கடவுளின்மேல் பாரத்தைப்போட்டுவிட்டு, ஆக்னஸ் உறங்கினாள்.

மறுநாட் காலை சூரியன் உதயமானான். ஆக்னஸ் படுக்கைவிட்டெழுந்து வீட்டிற்கு வெளியே வந்தாள். பனிமழை நின்றிருந்தது. அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அன்று வீட்டில் உண்ண ஒன்றுமே இல்லை.



எங்கேயாவது போய் உணவு கொண்டு வராவிட்டால் குழந்தைகள் எல்லாம் பசியால் வாட நேரிடுமென்பதை உணர்ந்தாள் அச்சிறுமி.

பனிமழை இல்லாதிருந்ததால் அத்தைரியமுள்ள சிறுமி வீட்டைவிட்டுப் புறப்பட்டுத் தனிமையாய் நடந்தாள். வெகு கஷ்டப்பட்டு ஒரு மைலுக்கப்பாலுள்ள ஒரு வீட்டை அடைந்தாள். அவ்வீட்டார் களைப்படைந்த ஆக்னஸைக் கண்டவுடன் மிக வியப்படைந்தனர். மேலும் அவள், தான் இரண்டு நாளாய் அடைந்த கஷ்டங்களைச் சொல்லக் கேட்டு கண்ணீர் விட்டனர். அவளுக்கு வேண்டிய உணவைக் கொடுத்தனர். அவள் திரும்பிவந்து தன் தம்பி தங்கைமார்களுக்கும் அவ்வுணவைக் கொடுத்து மகிழ்ந்தாள்.

ஆக்னஸின் பெற்றோரைத் தேடிச் சென்றவர்கள் அவர்கள் வீட்டிற்குத் திரும்பும் பொழுதே வழி தப்பிக் காட்டாற்றில் விழுந்து இறந்தார்களெனச் சொன்னார்கள். அதுகேட்ட ஜனங்கள் பட்ட துக்கத்திற்கு எல்லையே இல்லை.

பின்பு அந்த ஆறு அனாதைக் குழந்தைகளுக்கும் வேண்டிய உதவி புரிந்தனர். ஆக்னஸ் தன் பெற்றோர் திரும்பி வராத காலத்து மனந்தளராமல் தைரியமாகக் குழந்தைகளுக்கு வேண்டுவன செய்து வந்ததோடு நில்லாமல், ஆகாரம் இல்லாமல்

போகவே ஒரு மைல் தனிமையாக நடந்துபோய் விஷயத்தை அயலார்களுக்கு அறிவித்தது எவ்வளவு புகழத்தக்கது! பின்னர் இத் தீரக் குழந்தையின் வீரச்செயலைக் கேட்ட அந்நாட்டரசி அவளுக்கும், அவள் சகோதர சகோதரிகளுக்கும் வேண்டிய உதவி புரிந்தார்.

நெஞ்சத் திட்பமே விஞ்சுநல் வாழ்வு

---

## 14. ஈகைமிக்க பாரியின் மக்கள்

நம் நாட்டில் பாரி என்று ஒரு சிற்றரசன் இருந்தான். அவன் இல்லையென்று இரப்பவர்களுக்கெல்லாம் பொருளை வாரி வாரிக் கொடுப்பான். அதனால் அவனுடைய பெருஞ்செல்வம் குறைந்து அவன் ஏழையானான். ஆனாலும் அவன் புகழ் ஓங்கி வளர்ந்திருந்தது.

அது கண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பாரி மேல் பொறாமை கொண்டனர். அவன் நாட்டின் மேல் படை எடுத்தனர். சுத்த வீரனான பாரியை இவர்களால் வெல்ல முடியவில்லை. பின்பு இவர்களது சூழ்ச்சியால் பாரி மாண்டான். இவன் இறந்தவுடன் இவனது இரு பெண்களையும் கபிலர் தம்முடன் அழைத்துச் சென்றார்.

புலவரான கபிலர் ஏழை. அவர் அம்மக்களை அரசர்களுக்கு மணம் செய்து வைக்க முயன்றார்; முடியவில்லை. பின் அவர் அம்மக்களைத் திருக்கோவலூரிலுள்ள தம் நண்பரிடம் விடுத்துச் சென்றார்.



அவரும் கபிலரைப் போன்ற ஓர் ஏழை. அவர் வீட்டில் அரசனுடைய மக்கள் அதிகக் கஷ்டத்துடன் வாழ்ந்து வந்தனர். இதுவரை உண்ட அமுதுக்குப் பதில் கூழை உண்டனர்; பஞ்சணைக்குப் பதில் தரையில் துயின்றனர்; தம் கையே தமக்குத் தலையணையாகக் கொண்டனர்.

இப்படி இருக்கும் நாளில் தமிழ் மூதாட்டியாகிய ஔவை அந்த ஊர் வந்தாள். அப்பொழுது அதிக மழை பெய்தது. அச்சமயம் மழையால் நனைந்த ஔவை பாரியின் மகளிர் வசித்து வந்த வீட்டை அடைந்தாள். அவளைக்கண்ட பாரியின் மக்கள் மிகவும் உபசரித்தனர். நனைந்த ஆடையை மாற்றிக் கொள்ளும்படி ஔவைப் பிராட்டியை வேண்டினர்.

ஆனால் அவர்களிடம் ஔவைக்குக் கொடுக்கக் கூடிய ஆடை இல்லை. தங்களிடமிருந்த ஒரே ஒரு நீலச் சிற்றாடையை அன்புடன் ஔவைக்கு அளித்தனர். ஔவையும், "உள்ளன்பு மிகுந்த குழந்தைகளே! கொடையில் மிகுந்த பாரியின் குணம் உங்களிடமும் அமைந்திருப்பது கண்டு அகமகிழ்கின்றேன். நீர் வற்றிய காலத்தும் ஆறானது தன்னுடைய ஊற்றுப் பெருக்கால் தண்ணீரை உலகி

ளர்க்கு எவ்வாறு அளிக்கின்றதோ, அதேபோல் வறுமையுற்ற காலத்தும் வள்ளல்தன்மை குறையாத உங்களின் குணத்தை எவ்வாறு புகழ்வேன்! 'கொடையும் பிறவிக்குணம்' என்பதின் உண்மையை ஒருவாறு அறிந்தேன். உங்களுக்கு ஒரு குறைவும் வராது. கடவுள் உங்களைக் காப்பார்!" என்று ஆசீர்வதித்தாள். அவர்களும் நாளடைவில் அவ்வூர் அரசனை ஔவையின் உதவியால் மணந்தனர். பாலர்களே! பாரியின் மக்களின் ஈகைத் தன்மையைப் பார்த்தீர்களா?

ஈதலே மாந்தர்க்கு இசைபெற்ற வாழ்வு

---

## 15. சகோதர வாஞ்சைமிக்க சிறுமி

ஐரோப்பாக் கண்டத்தில் பிரான்சு என்று ஒரு தேசமிருக்கிறது. பிரான்சும், அதே கண்டத்தி லுள்ள ஜெர்மனியும் எப்பொழுதும் சண்டையிட்டுக்கொண்டிருந்தன. ஒரு சமயம் ஜெர்மனியி னுடைய படை ஒன்று பிரான்சு தேசத்தில் பிரவேசித்தது. அப்படையின் தளகர்த்தன் தன் எதிரிகளின் படை ஒன்று முன்னே சென்றிருப்பதாகவும், அது மிகவும் சிறிதென்றும் அறிந்தான். உடனே அப் படையைப் பின்பற்றிச் சென்று தோற்கடிக்க நினைத்தான். வெகு வேகமாகத் தன் படையை நடத்திவந்தும் எதிரிகளின் படை கண்ணில் புலப்



படவில்லை. இருந்தபோதிலும் விடாமுயற்சியுடன் மனது சலியாமல் முன் நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

அப்படிச் செல்லுகையில் ஓரிடத்தில் பாதை இரண்டாகப் பிரிந்தது. எப்பாதையில் எதிரியின் படை சென்றிருக்கவேண்டுமென்று அவனால் அறியக்கூடவில்லை. செய்வதின்னதென்று அறியாது அங்குமிங்கும் பார்த்தான். அவன் கண்ணில் அப்பாதையின் சமீபத்தில் இருந்த ஒரு தனி வீடு தென்பட்டது.

உடனே இருபது வீரர்களுடன் அவ்வீடு நோக்கிச் சென்றான். கதவு சாத்தப்பட்டிருந்தது. அவனுடன் இருந்த முரட்டுச் சிப்பாய்கள் கதவு உடைந்து போகும்படி தட்டினார்கள்.

உள்ளிருந்த பன்னிரண்டு வயதுள்ள சிறுமி மிகுந்த பயத்துடன் வெளிவந்து கதவைத் திறந்தாள். வெளியில் நிற்கும் விரோதிகளைக் கண்டு உடல் நடுங்கினாள். அவர்கள் வந்த உடன் அவர்களுக்கு வேண்டிய அன்னமிட்டாள். தண்ணீர் கொடுத்தாள். பின்பு தளகர்த்தன் அச்சிறுமியை நோக்கி, "அம்மா! நாங்கள் யார் தெரிகிறதா?" என்று கேட்டான்.

"ஐயா! தெரிகிறது. நீங்கள் ஜெர்மனிய தேசத்து வீரர்கள்" என்றாள்.

"இவ்வழியாகச் சற்று முன் ஒரு சேனை சென்றது உனக்குத் தெரியுமல்லவா?" என்றான் தளகர்த்தன். இதற்கு அச்சிறுமி பதில் கூறாது நின்றாள். உடனே அத்தளகர்த்தன் அவளை அங்கிருந்த தூணில் இறுகக் கட்டினான். அவள் முன் பாகத் தனது வீரர்களைத் துப்பாக்கியுடன் நிறுத்தினான். பின்பு அச்சிறுமியை நோக்கி, "சிறுமி! நான் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்காமல் இருக்கலாமென்று நினையாதே. நீ பதில் சொல்லாமலிருந்தால் இவர்கள் உன்னைச் சுட்டுக் கொல்லுவார்கள். சற்றுமுன் சென்ற அச்சேனை எந்தப் பக்கம் சென்றது என்பதைக் கூறிவிடு. உனக்கு உயிர்ப் பிச்சை அளிக்கின்றேன். இல்லாவிட்டால் நீ அநியாயமாய் இறப்பாய்!" என்றான்.

இவ்வுரை கேட்ட அச்சிறுமி மனங்கலங்கினாள். 'சேனை சென்ற வழியைக் காட்டினால் இம் முரடர்கள் அச்சேனையின் பின் சென்று வீரர்களை வரையும் கொல்லுவார்களே' என்று ஏங்கினாள்; அச் சேனையிலுள்ள தனது சகோதரர்களையும் கொன்றுவிடுவார்களே என நினைத்து வருந்தினாள். முடிவாகத் தன் சகோதரர்களுக்காகத் தன் உயிரையும் விடத் தீர்மானித்தாள் அவள். அதனால் அவன் கேட்ட கேள்விக்கு அச்சிறுமி பதில் அளித்தாளில்லை.



கோபங் கொண்ட ஜெர்மனியத் தளகர்த்தன் அவளை நோக்கி, 'இன்னும் மூன்றுமுறை கேட்பேன். பின்பு சுட்டுக் கொல்ல உத்தரவளிப்பேன்' என்று கர்ச்சித்தான். அதற்கு அவள் பயப்படவும் இல்லை; பதில் சொல்லவும் இல்லை.

"உயிரைவிடச் சித்தமாயிருக்கும் சிறுமியே! மறுபடியும் உன்னைக் கேட்கிறேன். அச்சேனை சென்ற வழி எது?" என்று வினவினான்.

சிறுமி பதில் அளிக்கவில்லை. ஒரு நிமிஷம் கழிந்தது. மறுபடியும் அவளை நோக்கி, "அநியாயமாக உயிரை இழக்கப்போகும் பேதாய்! இரண்டாம் முறையும் கேட்கின்றேன். அச் சேனை சென்ற திக்கு எது? சொல்லிவிடு" என்றான்.

தன் சகோதரர்களின் உயிரைக் காப்பாற்ற நினைத்த அச்சிறுமி பதில் சொல்லாது கல்லாய்ச் சமைந்து நின்றாள். இதனால் அதிகக் கோபங் கொண்ட தளகர்த்தன், "கடைசிமுறையாகவும் உன்னைக் கேட்கின்றேன். அச்சேனை சென்ற திசையை அறிவி. உன்னைவிட்டு விடுகின்றேன். இல்லாவிட்டால் இன்னும் ஒரு கணத்தில் உன் மேல் அநேகம் குண்டுகள் பாயும். நீ அநியாயமாய் இறப்பாய்; இது திண்ணம். உண்மையைச் சொல்லிவிடு" என்று கூறினான்.

அச்சமயத்திலும் தன் சகோதரர்களின் நன்மையை நாடிய அச்சிறுமி பதில் பேசாது கடவுளை நினைத்தவாறு நின்றாள். கல் நெஞ்சம் படைத்த காதகனும் தன்னுடன் இருந்த பாதகர்களை நோக்கி, "சுடு" எனச் சத்தமிட்டான். அவர்களும் அக் கொடிய செய்கையைச் செய்தார்கள். அப்பெண்ணும் தனது அரிய ஆவி நீங்கி அப்படியே மண்ணின் மீது வீழ்ந்தாள்.

பாலர்களே! தன் சகோதரர்களின் நன்மையைக் கருதித் தன் உயிரை விட்ட இந்தச் சிறுமியின் சகோதர வாஞ்சையைப் பார்த்தீர்களா? இவள் உயிர் நீத்த செய்தி அறிந்த பிரஞ்சு வீரர்கள் வீராவேசத்துடன் போர் புரிந்து ஜெர்மனியரைத் தோற்கடித்தனர். பின்பு வீரகுணமுள்ள அச்சிறுமியை நல்லடக்கம் செய்து அத்தேச முழுவதும் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

தன்னுயிர் போயினும் தளரார் பெரியோர்

---

## 16. அடக்கமுள்ள சிறுமி

ஜயபுரம் என்பது ஒரு நகரம். அதில் ஒரு பெண் பாடசாலை இருந்தது. பல சிறுமிகள் அதில் படித்து வந்தனர். ஒருநாள் பள்ளிக்கூடத்திலிருந்து எல்லோரும் வீட்டுக்குப் போகும்போது ஒரு பணக்கார வீட்டுச் சிறுமி மற்றொரு ஏழை வீட்டுச் சிறுமியைப் பார்த்து, "எனக்கு இரண்டு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். உனக்கு ஒருவரும் இல்லையே" என்று கூறினாள். அச்சிறுமி, "எனக்குப் பத்து வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் எப்பொழுதும் என்னைவிட்டுப் பிரியாமல் எனக்குத் தொண்டு செய்து வருகிறார்கள்" என்றாள். இவற்றைக் கேட்ட உபாத்தியாயினி, "யார் அம்மா உனக்குப் பத்து வேலைக்காரர்கள்?" என்று கேட்டார். அதற்கு அப்பெண்மணி உபாத்தியாயினியை நோக்கி, "அம்மா! என் கால் இரண்டு, கை இரண்டு கண் இரண்டு, காது இரண்டு, இவையன்றி வாயும் மூக்கும் இரண்டு; ஆகப்பத்து என்று விடையளித்தாள். உபாத்தியாயினி வியப்படைந்து அச்சிறுமியைத் தட்டிக்கொடுத்து, "நீ மிகவும் புத்திசாலி! கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக" என மெச்சினாள். இதனைக் கேட்ட பணக்கார வீட்டுப் பெண் நாணமுற்றுத் தலைகுனிந்த வண்ணம் தன் வீடு சென்றாள்.



சிறுமிகளே! பணத்தைக் காட்டிலும் படிப்பே உயர்ந்தது என்று இதனால் தெரிந்து கொண்டோமல்லவா? ஆகவே, நாம் பணத்தால் பெருமை பாராட்டக்கூடாது.

அறிவே எவர்க்கும் அழியாச் செல்வம்

---

## 17. அறிவுள்ள இரண்டு சிறுமிகள்

மங்கலபுரம் என்பது ஒரு கிராமம். அதில் ஒருநாள் பகலில் மழை பெய்தது. தெருவில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. ஒன்பது வயது கொண்ட இரண்டு சிறுமிகள் அந்நீரில் விளையாடிக் கொண்டிருந்தனர். ஒரு பெண் அணைகட்டித் தண்ணீரைத் தேக்கினாள். மற்றொரு பெண் அவ்வணையை உடைத்துத் தண்ணீரை ஓட்டினாள். இதனால் அவர்களுக்குள் சண்டை மூண்டு ஒருவரையொருவர் தள்ள இருவரும் அழுதுகொண்டு நின்றனர். மாடிமேலிருந்து இவற்றை அறிந்த ஒரு பெண்ணின் தந்தை இறங்கிவந்து மற்றொரு பெண்ணைத் திட்டினார். இதனை அறிந்த அந்தப் பெண்ணின் தந்தை வீட்டிலிருந்து வெளியே வந்து திட்டினவரைத் திட்டினார். இருவருக்கும் பெரிய சச்சரவு உண்டாயிற்று. தெருவில் கூட்டம் கூடிற்று. பலர் சண்டையை விலக்கிச் சமாதானம் கூறினர். ஒருவரும் கேட்டபாடில்லை. இருவரும் ஒருவரையொருவர் அடிக்கப்போனார்கள். இவற்றை அறிந்த இவ்விரண்டு சிறுமிகளும் தமக்குள் ஒரு யோசனை செய்தனர். அதன்படி ஒரு பெண் மற்றொரு பெண் தோளில் கைகளைப் போட்டுக் கொண்டும், ஒரு சிறுமியோடு மற்றொரு சிறுமி பேசிக்கொண்டும் தெருவழியே நடந்து சென்றனர். இதனை அறிந்த அச்சிறுமிகளின் பெற்றோர்க்குக்



கோபம் தணிந்தது. அறிவு வந்தது. “ஒன்பது வயதே கொண்ட சிறுமிகளுக்கு ஏற்பட்டிருக்கிற பொறுமைகூட நமக்கு இல்லையே” என்று இருவரும் நாணமடைந்தனர். பிறகு சண்டை ஓய்ந்தது. அவர்களுக்குள் சமாதானமும் ஏற்பட்டது.

சிறுமிகளே! இச்சிறுமிகளின் அறிவார்ந்த செய்கைகளைக் கவனித்தீர்களா? நீங்களும் மற்றைச் சிறுமிகளுடன் எப்பொழுதும் இவ்வாறு அன்பு பாராட்டி நேசித்து வரவேண்டும்.

**அன்பே துன்பம் அனைத்தையும் போக்கும்!**

59865